**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - மாகாண ஆக்கக்கூறு 2013**

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் - மாகாண ஆக்கக்கூறு 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2640 – எஸ்ஆர்ஜ (எஸ்எப்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் (iv) ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, வட மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் அமுலாக்கல் முகவராக உள்ளதுடன் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. இலங்கையில் வட மாகாணத்திற்குள்ளும் வட மாகாணத்திற்கும் தென் பிராந்தியத்திற்கும் இடையிலும் இணைப்பை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பின்வருமாறு உள்ளன.

**பகுதி பீ புனரமைப்பும் மீளமைப்பும்**

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஏறத்தாழ 140 கிமீ மாகாண வீதிகளின் புனரமைப்பு மற்றும் வட மாகாணத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் புனரமைப்பும் மற்றும்/ அல்லது மீளமைப்புச் செய்தல்.

**பகுதி சீ – வட மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலக புனரமைப்பு**

செயற்திட்ட நிர்வாக கைநூலின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 27.16 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 24.4 மில்லியன் (எஸ்டிஆர் 16.08 மில்லியன்) கடனளிக்கும் முகவரால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டன. செயற்திட்டத்தின் வரிகள் மற்றும் தீர்வைகளிற்காக இலங்கை அரசாங்கத்தால் ஐ.அ.டொலர் 2.76 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 ஒக்டோபர்

22 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின்படி இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும் நியாயமான சமர்ப்பித்தலும் தொடர்பான வடிவமைப்பு, அமுல்ப்படுத்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு என்பவற்றை உள்ளடக்குவதுடன் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தலும் அச்சந்தர்ப்பத்தில் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு

அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய

வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமையினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீளளிப்புகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமையினால் திருப்திகரமான அளவீடுகளை எடுத்திருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 449,854,274 ஆகவும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,926,118,090 ஆகவும் இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவுகள், முன்னைய ஆண்டிற்கான செலவுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவுகள் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவினத்தின் வகை | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| சிவில் வேலைகள் | 413,838,409 | 756,041,451 | 1,850,134,651 |
| நிலையான சொத்துக்கள் | 765,982 | 143,500 | 4,162,353 |
| கடன் வட்டி | 15,797,069 | 9,912,013 | 28,741,297 |
| செயற்திட்ட முகாமைத்துவக் கிரயம் | 19,452,814 | 14,833,351 | 48,079,789 |
| | 449,854,274 | 780,930,315 | 1,931,118,090 |

### 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கில் இருந்த மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | யூஎஸ். டொலர் | ரூபா. |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 17,654.06 | 2,244,905 |
| கூட்டு:- | | |
| மீளளிப்புகள் | 2,796,446.31 | 359,017,772 |
| வெளிநாட்டு நாணய பரிமாற்று இலாபம் | - | 2,088,648 |
| | 2,814,100.37 | 363,351,325 |
| கழி:- | | |
| பற்றுதல்கள் | 2,477,424.08 | 319,329,889 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 336,676.29 | 44,021,436 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 5.1 நிதியத்தின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்குரிய நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பவற்றிற்குரிய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கரயம் | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டில் நிதிகளின் பயன்பாடு | 2013 திசெம்பர் 31 வரை திரண்ட நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ரூபா. மில். | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில். |
| ஏடீபீ | 24.40 | 3,172.0 | 449.5 | 405.0 | 13.26 | 1,724 |
| ஜீஓஎஸ்எல் | 2.76 | 358.8 | 57.6 | 44.9 | 1.55 | 202 |
| மொத்தம் | 27.16 | 3,530.8 | 507.1 | 449.9 | 14.81 | 1,926 |

## 5.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 2,509 மில்லியன் கிரயமான 140 கிலோ மீற்றரையுடைய வட மாகாணத்தின் ஆறு வீதிகளை புனரமைப்பதற்காக செயற்திட்டத்தினால் ஆறு ஒப்பந்தங்கள் 2011 பெப்ரவரியில் கையளிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் என்பன கீழே தரப்படுகின்றன.

| வீதி | நீளம் கிலோ மீற்றர்கள் | ஒப்பந்த மதிப்பீட்டுக் கிரயம் (வற் சேர்த்து) | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் உள்ளபடியான கிரயம் (வற் சேர்த்து) | பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | உள்ளபடியாக பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தியாக்கல்களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | | | |
| என்பீ01 | 15.49 | 457,925,394 | 428,101,852 | 2013.04.12 | 2013.04.12 | 100 |
| என்பீ02 | 26.50 | 517,584,090 | 367,305,995 | 2013.10.30 | - | 66 |
| என்பீ03 | 17.32 | 378,316,673 | 335,637,874 | 2012.11.18 | 2012.11.18 | 100 |
| என்பீ04 | 26 | 351,923,141 | 256,107,270 | 2013.05.23 | 2013.06.23 | 100 |
| என்பீ05 | 28.80 | 448,435,022 | 290,003,389 | 2013.05.23 | 2013.05.23 | 100 |
| என்பீ06 | 27.20 | 355,416,235 | 172,978,271 | 2013.05.23 | 2013.05.31 | 65 |

(ஆ) மேற்கூறப்பட்ட புனரமைப்பு செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வேப்பங்குளம் - பெரியமுறிப்பு (என்பீ02) வீதியை புனரமைப்பதற்கான ஒப்பந்தக் காலம் 2013 பெப்ரவரியில் பூர்த்திசெய்வதற்கு ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2014 ஏப்ரல் வரை நீடிக்கப்பட்டிருந்தது. பெறக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புனரமைப்பு செயற்பாடுகள் 66 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதனால் ஒபப்ந்தக்காரரின் நலிவான செயலாற்றலின் காரணமாக ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை மீள வழங்குவதற்காக 2014 யூன் 30 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) புத்தூர் - பாலமடு (என்பீ06) வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகளும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் 65 சதவீதமான மந்தகதியான செயல்முன்னேற்றத்தைக் காண்பித்தது.

(iii) மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளின் தன்மை மற்றும் அளவுகளைத் தீர்மானிப்பதற்காக பொருத்தமான நில ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமையினால் பல ஒப்பந்தங்களின் வடிகால் முறைமை மற்றும் உட்கட்டமைப்பு வேலைகளின் நோக்கெல்லையில் தொடர்ச்சியாக மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன என்று குறிப்பிடப்பட்டது. தெரிவுப் பரிசோதனையின் போது இரட்டிப்பெரியகுளம் - புத்தூர், செட்டிக்குளம் - துடரிக்குளம் மற்றும் பண்டிசுரிச்சான்-ஆண்டியாபுளியங்குளம் (என்பீ04) என்ற வீதிகளின் ஆரம்ப அளவீட்டுப் பட்டியல்களில் ரூபா 4.48 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்ட வடிகால் முறைமை மற்றும் உட்கட்டமைப்பு வேலைகள் ரூபா 13.77 மில்லியனுக்கு திருத்தப்பட்டிருந்ததுடன் மஹியங்குளம் - பள்ளமடு வீதி (என்பீ05) ஆரம்பத்தில் ரூபா 6.2 மில்லியனாக மதிப்பிடப்பட்ட போதும் வடிகால் முறைமை மற்றும் உடகட்டமைப்பு வேலைகள் ரூபா 24.49 மில்லியனாக திருத்தப்பட்டிருந்தது.

## 5.3 அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல்

செயற்திட்டத்தின் ''இ'' பிரிவில் ''வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தை புனரமைத்தல்'' என்ற பெயரில் ரூபா 70 மில்லியன் கிரயத்தில் அலுவலகக் கட்டிடம் நிர்மாணித்தல் உள்ளடங்கியிருந்த போதிலும் 2014 யூன் 30 வரையிலும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை.